Registered as a News Paper    பக்கங்கள் 06    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 08    திருவள்ளுவர் ஆண்டு 2024    தை 11    (24-01-1993)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 341

## ஓய்வூதிய அதிகரிப்பு ஜனவரி முதல் கிடைக்கும்

நவம்பர்மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தஓய்வூதியர்களுக்கான முந்நூறு ரூபா சம்பள உயர்வு ஜனவரி மாதம் முதல் வழங்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. பெப்ரவரி மாதத்திலிருந்தே இச் சம்பள அதிகரிப்பு வழங்கப் படுவதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்த போதும் பின்னர் அது ஜனவரிமுதல் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி செயலகம் பணிப்புரை விடுத்திருந்ததுதெரிந்ததே. [6ஆம் பக்கம் பார்க்க]

# காங்கேசன் பாதையை திறக்க

# விடுதலைப்புலிகள்-அரசு இணக்கம்

## முத்தரப்பு உடன்பாடு செய்ய செஞ்சிலுவைச் சங்கம் முயற்சி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகமூடாக யாழ். குடா நாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வருவதற்காக பாதையைத் திறந்துவிட விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசாங்கமும் சம்மதம் தெரிவித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, முத்தரப்பு உடன்பாடு ஒன்று செய்து கொள்ளும் முயற்சியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டு வருகின்றது.

காங்கேசன்துறை துறைமுகமூடாக குடா நாட்டிற்குள் பொருள்களை கொண்டு வருவதற்கான பாதை திறப்பது தொடர்பான விடயத்தில் புலிகள் -அரசு ஆகிய இருதரப்பினரும் சம்மதம் தெரிவித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து இப் பாதை விரைவில் திறக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது.

இப்பாதையில் சோதனை நிலையங்கள் அமைவிடங்கள் குறித்தும் வாகனப்போக்குவரத்துக்கான திகதிகள் குறித்துமே தீர்மானம் எடுக்கப்படவேண்டியுள்ளதாகவும்தெரியவருகின்றது.

இப் பாதை திறப்பு முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங் (5 ஆம் பக்கம் பார்க்க)

## பாதை திறக்கப்பட்ட பின் மண்ணெண்ணெய் வரும்?

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்தினூடாக குடாநாட்டுக்குத் தேவையான மண்ணெண்ணெய் எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காங்கேசன்துறையில் இருந்து சேந்தாங்குளத்தினூடாக [6 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவப் பிடியிலிருந்து 21 பேர் நேற்று விடுவிப்பு

[வடமராட்சி]

இளவாலையில் சிறிலங்கா இராணுவத்தினரின் பிடியில் கடந்த ஐந்து மாதங்களாக சிக்கியிருந்த அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த இருபத்தொரு பேர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் 'குமாரி' கப்பல் மூலம் நேற்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தனர்.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 24ஆம்திகதி சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு இதுவரை தடுத்து வைக்கப்பட்டு நேற்று (5 ஆம் பக்கம் பார்க்க)

## போதிய மருத்துவவசதி இன்றி வலிவடக்கில் 24 பேர் மரணம்

### ராணுவப் பிடியில் சிக்கியோர் அவலம்

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கில் இராணுவம் ஆக்கிரமித்த பகுதிகளில சிக்குண்ட 24 பேர் வரையில் போதிய மருத்துவ வசதி இன்மையால் மரணமடைய நேர்ந்ததாக அப்பகுதிக்குச் சென்ற யாழ். கத்தோலிக்க திருச்சபைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; "சனநடமாட்டம் அற்று வெறிச்சோடிக்காணப்படும் இப்பிரதேசம் வீடுகள், கோவில்கள், தேவாலயங்கள் அனைத்தும் இடிந்த நிலையில் காடு மண்டிக் கிடக்கிறது."

"தள்ளாடும் வயோதிபர்களும் தளர்ந்த மனோநிலையில் ஏனையோரும் காணப்படுகின் [5-ம் பக்கம் பார்க்க]

## இந்திய அரசுக்கு எதிராக லண்டனில் ஆர்ப்பாட்டம்

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு அவர்களின் மரணத்திற்கு காரணமாக இருந்த இந்திய அரசைக் கண்டித்து லண்டனில் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நடத்தப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியக் கடற்படையினரின் பொறுப்புணர்ச்சி அற்ற கடல் கொள்ளை இதுவென இவ் ஊர்வலத்தை ஒழுங்கு செய்திருந்த தமிழ்ச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் இந்திய எதிர்ப்புக் கோஷங்கள் எழுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வாணிபம்/தொழில் பதிவு சான்றிதழ் வழங்கல்

நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தமது வாணிபம் / தொழில் முயற்சிகளைப் பதிவு செய்ய விண்ணப்பித்தவர்கள், வாணிபம்/தொழில் பதிவுச் சான்றிதழ்களைப் பின்வரும் நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை யாழ்ப்பாணம், கந்தர் மடத்தில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் வருவாய்ப்பகுதிச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சான்றிதழ்கள் உரிமையாளர்களிடம் மட்டுமே கையளிக்கப்படுமென்பதைக் கவனத்திற் கொள்ளுமாறும் வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு-25.01.93 முதல் 26.01.93 வரை.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு-27.01.93.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு-28.01.93.

## கிட்டுவந்தகப்பலின் ஊழியர் சி. பி. ஐயிடம் ஒப்படைப்பு

எம். வி. அகத் என்ற விடுதலைப் புலிகளின் கப்பலை இந்தியக் கடற்படை சர்வதேச கடல் எல்லையில் வைத்து வழிமறித்து சென்னைக்குக் கொண்டுவரப்பட்ட போது உயிர்தப்பிய ஒன்பது கப்பல் ஊழியர்கள் விரைவில் மத்திய சிறப்புப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்படவுள்ளார்கள்.

சேலம் மாவட்டம் மேட்டூரில் நேற்றுச் சந்தனக் கட்டைக் கடத்தல் தலைவன் வீரப்பனைப்பிடிக்கக்காவல்துறையினருடன் ஆலோசனை நடத்திய பின்னர் செய்தியாளரிடம் பேசியசிறப்புப்புலனாய்வுப் பிரிவின் பொலிஸ்மா அதிபர் கார்த்திகேயன் இதனைத் தெரிவித்தார்.

## இந்துக் கோவில் காணிகளில் சிங்களக் குடியேற்றம்

திருக்கோணமலை மாவட்டத்தில் இருக்கும் இந்துக் கோவில்களுக்கு சொந்தமான காணிகளில் சிங்களவர் அத்துமீறிக் குடியேறியிருப்பதாக இந்து கலாசார அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் கூறியுள்ளார். திருக்கோணமலை நகரில் திருக்கோணேஸ்வரம் கோயிலுக்கு சொந்தமான பலஏக்கர் காணிகளும், தம்பலகமம் போன்ற பகுதிகளில் இந்துக் கோயில்களுக்கு சொந்தமான பலஏக்கர் வயல் நிலங்களும் இருப்பது தெரிந்ததே.

## ஆங்கில திருச்சபை ஆயர் அரசஅதிகாரிகளுடன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட ஆங்கிலத் திருச்சபையின் ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ கொழும்பில் ஜனாதிபதியின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், பாராளுமன்ற தெரிவு குழு உட்பட ஏனைய அரசியல் தலைவர்களுடன் விரிவான பேச்சுவார்த்தை நடத்திவருவதாகவும் இப் பேச்சுவார்த்தையின் ஆரம்பகட்டம் கணிசமான முன்னேற்றம் அடைந்து இருப்பதாகவும் அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தான் யாழ்ப்பாணம் வந்த விடயம் தான் நினைத்து வந்ததைவிட முன்னேற்றமாக அமைந்ததாகவும், தன்னை கௌரவித்த விடுதலைப் புலிகளுக்கு நன்றி தெரிவிக்குமாறும் அவர் அவ் வட்டாரங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதே வேளையில் யாழ்ப்பாண விஜயத்தின் முக்கிய நிகழ்வுகளும், விடுதலைப் புலிகளின் மனிதநேயச் செயல் தொடர்பாக மகஜர் ஒன்றை சிறிலங்கா ஜனாதிபதிக்கு சமர்ப்பித்ததாகவும் உத்தியோகபற்றற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மீட்புநிதி சேகரிப்பு

இன்று நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் காலை 9.30 மணி தொடக்கம் 10.00 மணி வரையும் மீட்பு நிதி சேகரிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது மீட்புநிதி செலுத்தத் தவறியோர் இக் குறித்த நாளில் தமது மீட்பு நிதிக் கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் வெற்றி அரசன் தெரிவித்துள்ளார்.

## வரி விளம்பரம்

### மிருதங்கம்

புதிய மிருதங்கம் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் ஓடருக்கு சலுகையுடன் செய்து தரப்படும் தரகர் தேவையில்லை. நேரில் வரவும் கோவிந்தபிள்ளை விஜயகுமார் மிருதங்கதொழில் நிலையம் 192/1 நாவலர் வீதி பெருமாள்கோயிலடி யாழ்ப்பாணம். (4125)

### மாற்றம் :02

மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டிய மாற்றங்களைக் கொண்ட ''மாற்றம்'' (தைபங்குனி) சஞ்சிகை சிறுவர்கதை. சிறுகதை, அறிவியல் துணுக்குகளைக் கொண்டு வெளிவந்து விட்டது ரூபா 10/- புத்தகசாலைகளில் கிடைக்கும். வெளியீடு தமிழ்த்தாய் மன்றம் (4129)

### கரிசலாங்கண்ணி

கரிசலாங்கண்ணி நாற்றுஒன்றைப் பத்து பால்மா வெற்றுப் பக்கற் தந்து பெற்றுக்கொள்வலாம். ''மில்க்வைற்''
(சி-5867)

### கலந்துரையாடல்

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து முகாம்கள், குடியிருப்புகள் என்பவற்றில் இருக்கும் மக்களைத் தவிர்த்து யாழ் மாவட்டத்தின் ஏனைய பிற இடங்களில் வசிக்கும் தீவகப் பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள், வர்த்தகர்கள், தொழிலாளிகள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது புதன்கிழமை காலை பத்துமணியளவில் யாழ். பருத்தித்துறைவீதி மூதலாம் ஒழுங்கையிலிருக்கும் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் தீவகக் கோட்டச் செயலகத்தில் நடைபெற இருக்கும் இக்கலந்துரையாடலில் சமுகமளிக்கும்படி அனைவரும் வேண்டப்பட்டுள்ளனர்.

## 8-ம் நாள் நினைவலைகள்



### லெப். கேணல் குட்டிசிறி

(இராசையா சிறிகணேசன்)

தளபதியின் வளர்ப்பினிலே
வளர்ந்திட்ட வீரனே குட்டிசிறி
உன் திறமையிலே செய்திட்ட
மோட்டாருக்கு உன் பெயரை சூட்டினோமே
கோட்டையிலே உன் பெயரைக்
கேட்டதும் ஓடிய ராணுவம் தான் எத்தனை எத்தனை
கொக்காவில் முகாம் தகர்ப்பினிலே
உன் திறமையைக் கண்டோம்
உன் சாதனைகள் தான் எத்தனை எத்தனை
தமிழீழத்தாய் பெற்றெடுத்த வீரப்புலியே
தளபதி கிட்டு அண்ணா
வளர்த்திட்ட வீரப்புலியே
கிட்டு அண்ணாவுடனே
வீரச்சாவைத் தழுவிக்கொண்டாய்

- ஜேசுதாஸ்

- போராளிகள்

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
[சி-5872]

## படையினருக்கு 70 பஸ்கள்

வடக்கு, கிழக்கு பகுதியில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் படையினரின் பாவனைக்கென அரசாங்கம் எழுபது பஸ்வண்டிகளை கூட்டுப்படைத் தலைமையகத்திடம் வழங்கியுள்ளது. பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட இந்த பஸ் வண்டிகள் ஒவ்வொன்றும் 61 இருக்கைகளை கொண்டவை. கூட்டுப்படைத் தலைமையகத்தின் முன்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கவினால் கூட்டுப்படைத் தளபதி ஹமில்டன் வனசிங்காவிடம் இந்த வாகனங்கள் கையளிக்கப்பட்டன.

## 1-ம் வருட நினைவுத் துளிகள்



### வீரவேங்கை சிவராம்-கலைவேந்தன்

[வ. குணதீஸ்வரன் (குணம்)]

மண்ணின் மடியில் 8-12-1973 | மண்ணிற்கு உரமாகி 21-1-1992

களங்களில் நீ களமாடிய போதினிலும்
காவலிற்கு நீ கடமையிலிருந்த போதினிலும்
பாயாத ரவைக் குண்டு - எதிரி
பதுங்கியிருந்து தாக்கியதில் பட்டதுவோ
உன் பட்டுடலும் உரமாகிப் போனதுவே

உன் பிரிவினால் வாடும்
தாய், சகோதரர்கள்,
அண்ணிமார்

ஆடியபாதம் வீதி,
கொக்குவில். (4147)

## சரணம் ஐயப்பா

## சண்டிலிப்பாய் - வேவிற்பதி

## ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் தேவஸ்தானம்

## சித்திரத் தேர்

## பவளக்கால் நாட்டும் வைபவம்

## காலம்: 25-01-1993 திங்கட்கிழமை

### ★ நிகழ்ச்சி நிரல் ★

காலை 8-30 அபிசேக ஆராதனைகள்
9-45 பவளக்கால் நாட்டும் வைபவம்
பயன்தரு மர நடுகை
சிவதர்மவள்ளல், கலாநிதி க. கனகராஜா அவர்கள்
[அதிபர், மில்க்வைற் தொழிலகம்]
10-30 பாராட்டு வைபவம்
தலைவர்: வேதவித்தகர் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள் அவர்கள்
(தலைவர், தேர்த் திருப்பணிச் சபை)

திருமுறை ஓதல்:
இன்னிசை வேந்தன் பொன். சுந்தரலிங்கம் அவர்கள்
திருமுறைச்செல்வர் நா. வி. மு. நவரத்தினம் அவர்கள்
[விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவு]

கௌரவிப்பு:
சிற்பாசாரியார் திரு. ஆ. சிவரத்தினம் அவர்கள்

ஆசியுரை:
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம்
சோமசுந்தரதேசிகஞானசம்பந்தபரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்
துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

வாழ்த்துரை:
பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள்
(யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர்)
தமிழருவி திரு த சிவகுமாரன் அவர்கள்
(ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி)
செஞ்சொற்செல்வன் திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்
[ஆசிரியர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி]
செஞ்சொற்காவலன் திரு. இ. ஜெயராஜ் அவர்கள்
[அமைப்பாளர், அகில இலங்கை கம்பன் கழகம்]

அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்

[5863] -தேவஸ்தானம்

## நினைவு கூருகின்றோம்..

### 1993-01-24

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் (திருக்கோணமலை - கும்புறுப்பிட்டி) எதிர்பாராத விதமாக ஏற்பட்ட படகு விபத்தில் எமைப் பிரிந்த

லெப். பாண்டி (-தர்மகுலசிங்கம் திரியாய்- திருக்கோணமலை)

ஒஸ்நெஸ் (மாரிமுத்து சிவராசா - சிவன் கோவிலடி, திருக்கோணமலை)

முல்லைத்தீவு - ஒட்டிசுட்டான் பகுதியில் முகாமொன்றில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த

★ ரஞ்சித் (சிவபாதம் சிறிகாந்தன் - மானருவி, ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

வவுனியா - வேலன்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

2-ம் லெப். நேசன் (செல்லத்துரை பரமநாதன் - 5-ம் படிவம் பாவற்குளம் வாரிக்குட்டியூர் - வவுனியா)

1991ஆம் ஆண்டு கிளிநொச்சி - ஆனையிறவு முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

மேஜர் மக்கன்ரோ [சதாசிவம் புலேந்திரன்- கனகராயன்குளம் - வவுனியா]

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட செங்கலடி 02 ஐச் சேர்ந்த தமிழிளைஞன் - வியாபாரத்திற்கெனச் சென்று காணாமற் போன புதுநகர், வீச்சுக்கல்முனையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/5865)

# வட - கிழக்கு பாடசாலைகளை மிக கஷ்டப் பிரதேசமாக்குக

## ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

கடந்த இரண்டரை வருட காலமாக நீடித்துக் கொண்டிருக்கும் இந்த யுத்தத்தினால் அமைதியான வாழ்க்கையை இழந்த நிலையிலும் அடிப்படை வசதிகள் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலும் சேவை செய்து கொண்டிருக்கிறோம்.

இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர் சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

அம்மகஜரில் மேலும் ஜூன் 1990லிருந்து வடக்கு கிழக்கு மாகாணத்தில் இ. போ. ச, புகையிரதம், தபால், தொலைபேசி, வங்கிபோன்ற அடிப்படைச் சேவைகள் வழங்கப்படாத நிலையிலும் அப்பகுதியில் உள்ள சகலபாடசாலைகளையும்மிகக்கஷ்டப் பாடசாலைகளாகப் பிரகடனப்படுத்தி அதற்கான அலவன்சாக 15 வீதம் வழங்கப்பட வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

## ஆனையிறவு பாதை திறக்க அரசு முயற்சிக்கிறதாம்

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஆனையிறவுப் பாதையின் ஊடாக பொருள்களை எடுத்துச் செல்வதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை சிறிலங்கா அரசு நாடியுள்ளது. யாழ்ப்பாண குடாநாட்டிற்குள் பொருள்களை எடுத்து வருவதற்கும், பயணிகள் போக்குவரத்திற்கும் ஆனையிறவுப் பாதையை பயன்படுத்துவது பற்றி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒத்துழைப்பைப் பெறுமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கேடகப்பட்டிருப்பதாக சபை முதல்வரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலம் நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; ஆனையிறவுப் பாதையை பயன்படுத்தி இராணுவத் தாக்குதல் எதுவும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்ற வழமைக்கு மாறான உறுதி மொழியைத் தருவதற்கும் அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அறிவித்தார்.

## கலைமுகம்

[காலாண்டிதழ்]

1993 ஆம் ஆண்டுக்கான சந்தாதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்

தொடர்பு;

திருமறைக்கலாமன்றம்

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [சி-5873]

## காணவில்லை



நல்லையா வைத்தியநாதன் [ஆசிரியர் தாமோதரம் வித்தியாசாலை உடுப்பிட்டி] [வயது56]26-12-1992அன்று கொழும்பு சென்றவர் தை 5ஆம் திகதிவரை கொழும்பு செல்லவில்லை. இவரைப் பற்றி அறிந்தவர்கள் கீழ்க் காணும் விலாசத்துக்கு அறியத்தரவும்.

குருககல பகுதி,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.
[4144]

தகவல்;
நடராசா மாஸ்ரர்
[சகோதரன்]

சகல பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கும்,

## விசேட பொதுக்கூட்டம்

### 07-02-1993

1. கூ. அ. உ. ஆணையாளரின் 24. 12. 92ஆம் திகதிய முன் அங்கீகாரக் கடிதத்தின் பிரகாரம், மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 07. 02. 1993ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 00 மணிக்கு சங்கப் பணிமனையில் (பி. எஸ் சேவிஸ் நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) சங்கத்தலைவர் திரு தி. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் கூட்டப்பெறும். தவறாது கூட்டத்திற்கு சமூகம் அளித்து ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர் செயலாளர்

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

முக்கிய குறிப்பு: கூட்ட நிகழ்ச்சி நிரல் கிடைக்கப் பெறாதோர் சங்கக் கிளையிலோ அல்லது தலைமைக் காரியாலயத்தில் செயலாளருடனோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

2. பங்குப் பணம் ரூ. 100/- : 6. 3. 1992 இல் திருத்தியமைக்கப்பட்ட கூட்டுறவுச் சட்டத்திின்படி உப விதி 18 (1) அமைவாக ஒரு பங்கின் பெறுமதி ரூ 100/- ஆகும். எனவே சகல அங்கத்தவர்களும் தமது பங்கினை ரூ. 100/- ஆக வைத்திருக்கத் தவறும் பட்சத்தில் கிளைக்குழுத் தேர்தலிலோ, பொதுச்சபையிலோ, நெறியாளர் குழுவிலோ பிரதிநிதித்துவம் வகிக்க முடியாது. எனவே 5. 3. 93ஆம் திகதிக்கு முன் தங்கள் பங்குப் பணத்தை ரூ. 100/- ஆக ஆக்கிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர் தலைவர்

(சி/5869)

## ‘சோலைக்குயில்’ நூல் வெளியீடு

(சாவகச்சேரி)

கவிஞர் சரசாலையூரானின் ‘‘சோலைக்குயில்’’ நூல் வெளியீட்டு விழா நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் அதிபர் திரு த. செல்வராஜா அவர்களின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. கொத்தணி அதிபர் திரு. க. சிவபாதசுந்தரம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார் தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் அவர்கள் நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றினார். யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், பிரதேச செயலர் திரு பு. சுந்தரம்பிள்ளை, விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பைச் சேர்ந்த திரு வ. அருளாளன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இதனைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (மு)

## வருடாந்த உற்சவம்

ஒட்டுமடம் புனித செபஸ்தியார் தேவாலய வருடாந்த உற்சவம் சிறப்புற நடைபெறுகின்றது. இறுதி நாளான இன்று பங்குத்தந்தை திரு ஞானப்பிரகாசம் அவர்கள் திருப்பலி பூசைஒப்புக் கொடுப்பார். இதனைத் தொடர்ந்து காலை 8 மணியளவில் புனித செபஸ்தியாரின் திருச் சொரூபம் சுற்றுப்பவனி நடைபெறும்

## இலவச பயிற்சி வகுப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளையினால் வல்வெட்டித்துறையில் பெண்களுக்கான இலவச தையல் பயிற்சி வகுப்பு எதிர் வரும் முதலாம் திகதி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இப் பயிற்சி மூலம் பயனடைய விரும்புவோர் இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன் மேற்குறித்த கிளை அலுவலகத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டுமென அறிவிக்கப்படுகிறது. (யோ)

## றெட்பானா உதவி

(குருநகர்)

றெட்பானா சிறுவர் பாதுகாப்பு நிதியம் 21 முகாம்களில் உள்ள 750 குடும்பங்களை பராமரித்து வருகிறது.

மேற்படி குடும்பங்களில் இருக்கும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் மற்றும் புத்தகங்கள் என்பவற்றையும் வழங்கியுள்ளது.

மரணச்செலவாக ரூபா 1500. மற்றும் ருதுச்சடங்கு, பிள்ளை பேற்றுச்செலவுகளையும் இடம் பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு வழங்கிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (21)

## 2ஆம் மாத நினைவுக் காயங்கள்

இளந்தளிர்

### கப்டன் மலரவன் (லியோ)

(முன்னை நாள் யாழ். மாவட்ட வி. பு. மாணவர் அமைப்பு பொறுப்பாளர்)

இவன் மென்மையானவன்
மிக மிக மென்மையானவன்
மலர்களைப் போல - ஆனால்
இவனது கால்களோ
களஆசை கொண்டவை - அதனால்
கோட்டை, காரைநகர்,
முல்லைத்தீவு, மணலாறு,
மாங்குளம், சிலாவத்துறை,
ஆனையிறவு, கட்டைக்காடு,
பலாலியென களமாடி
மாவீரனாய் வாழ்கிறான்.

— குடும்பத்தினர்

(4142)

## 2-ம் ஆண்டு நினைவலைகள்



ஆண்டவன் அடியில் மலரிது அடைந்த நாள் 24-01-1991


### லீனா பரஞ்சோதி

(தாதி உத்தியோகத்தர் யோதனா வைத்தியசாலை,யாழ்ப்பாணம்)

மூன்றகவை முடிந்த மகள் அம்மா என்றழைக்க அங்கலாய்த்தேங்குகிறாள். ஆனால் அம்மா என்றழைக்க அரவணைப்பில் மகிழ அங்கில்லையே நீ. அரவணைப்பின்றி அவளும் அம்மாவுக்காய் ஏங்குகிறாள். ஓடிவந்து அவள்துயரை ஒரு நொடியில் போக்காயோ.

48, சென்பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். [4034] மகள்: கௌதமி கணவன்: அ. பரஞ்சோதி

## 8-ம் நாள் நினைவலைகள்



### மேஜர் வேலன்/மலரவன்

(சுந்தரலிங்கம் சுந்தரவேல், வியாபாரிமூலை)

இந்திய வல்லாதிக்கப் பிடியில் வரலாற்றுப் போரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மேஜர் வேலன், மலரவன் அவர்களின் ஆத்மசாந்திக்கான நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை [24 - 01 - 93] எமது இல்லத்தில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் போராளிகளையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். இன்று நண்பகல் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

வியாபாரி மூலை. [4137] தந்தை, சகோதரிகள்.

# ஜெயலலிதா ஆட்சியில் பெண்கள் நிம்மதியாக நடமாட முடியவில்லை

**-சிவாஜி கணேசன்**

(சென்னை)

'ஜெயலலிதா ஆட்சியிலே தமிழ்நாட்டில் வழிப்பறி, கொள்ளை அதிகரித்திருப்பதுடன் பெண்கள் வீதியில் நிம்மதியாக நடமாட முடியவில்லை' இவ்வாறு தமிழக ஜனதாக் கட்சித் தலைவர் சிவாஜி கணேசன் கூறினார்.

ஜனதா தள கட்சியின் பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசும்போது அவர் மேலும் கூறியதாவது;

தற்போது இந்தியாவின் நிலையை எல்லா மக்களும் அறிவார்கள். எந்த நேரமும் அந்நியன் நாட்டினுள் நுழைந்துவிடக் கூடும் என்ற பயங்கர சூழ்நிலை உருவாகியுள்ளது. இதற்கு பாரதீய ஜனதாக் கட்சிதான் முழுக் காரணம். காங்கிரசார் அதற்குத் துணைநிற்கின்றனர்.

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதால் நாட்டில் பல சிக்கல்கள் உருவாகியுள்ளன. மதவாதம் வளர்ந்து நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமடைந்துள்ளது. அயோத்தி சம்பவம் காங்கிரஸ் கட்சியின் அஜாக்கிரதைக்கு நல்லதொரு உதாரணம். வி.பி சிங் ஆட்சியின் போது அத்வானி ரத யாத்திரை மேற்கொண்டார் ஆனால் அவரை அயோத்திக்குள் நுழையவிடாமல் தடுக்கும் தைரியம் வி.பி. சிங்கிற்கு இருந்தது. காங்கிரஸ் கட்சித் தலைவர் அவ்வாறு செய்யவில்லை. அதற்கு துணைநின்றுள்ளார். இப்போது பாரதீய ஜனதாக் கட்சி தன்னை ஏமாற்றி விட்டதாகக் கூறி அழுகிறார். ஏமாறுகிறவரை நம்பி எப்படி நாம் வாழமுடியும்? அவரால் எப்படி நல்ல ஆட்சியைக் கொடுக்கமுடியும்?

ஏமாந்துபோனது காங்கிரஸ் கட்சியோ, நரசிம்மராவோ அல்ல. இந்நாட்டு மக்கள் தான் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். பாரதீய ஜனதாக் கட்சியும் காங்கிரசாரும் கூட்டுச் சேர்ந்து நாட்டின் சட்டத்தையும் உச்ச நீதிமன்றத்தையும் ஏமாற்றிவிட்டார்கள்.

இவர்கள் பாராளுமன்றத்தில் பதவியேற்கும் முன் மதவாத கொள்கைகளுக்கு இடம் கொடுக்க மாட்டோம் என்று கூறும் உறுதிமொழியைக் காக்கத் தவறிவிட்டார்கள். தீயதைப் பார்க்காதே. தீயதைக் கேட்காதே. தீயதைப் பேசாதே என்று சொன்னார் காந்தியடிகள். ஆனால் பாரதீய ஜனதாக் கட்சியுடன் சேர்ந்து காங்கிரஸ் நடத்தி வரும் தீய ஆட்சியை நாம் பார்க்காமலோ, கேட்காமலோ, பேசாமலோ இருக்க முடியாது.

நம் நாடு சுதந்திரம் அடைந்து 40 ஆண்டுகளாகியும் இன்னும் நாம் அடிமை வாழ்வு தான் வாழ்கின்றோம். சலுகைகள் கொடுத்து வளரமுடியாதபடி காங்கிரஸ் குறுக்கே நிற்கிறது. இந்தத் தீய சக்தியாக இருந்துவரும் காங்கிரஸ் ஒழிக்கப்பட்டால்தான் புதிய இந்தியா உருவாகமுடியும்.

இது ஒரு புறம் இருக்க எமது மாநிலத்தின் அ.தி.மு.க.வின் போக்கு அதைவிட மோசமாகியுள்ளது. தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவில் தமிழக முதலமைச்சர் பேசியது இதற்கு நல்ல உதாரணம்.

அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த இந்த இரண்டு ஆண்டுகளில் நாடு மிகவும் பின்தங்கி விட்டது. எரிபொருள் சேமிப்பு பற்றி பிரசாரம் செய்கிறார்கள். ஆனால் முதல் அமைச்சரின் காருடன் 1000 கார்கள் அணிவகுத்துச் செல்கின்றன. இந்த அரசு எமக்கு தேவைதானா?

மத்தியில் உள்ள காங்கிரஸ் கட்சியும் மாநிலத்தில் உள்ள அ.தி.மு.க. அரசும் சண்டையை நிறுத்தினால்தான் மக்கள் பாதிப்படையாமல் இருக்கலாம்.

காமராஜரின் தொண்டர்களாகிய நாம் மத ஒற்றுமையை வளர்த்து தோழமைக் கட்சிகளுடன் சேர்ந்து புதியதோர் இந்தியாவை உருவாக்க வேண்டும். இதற்கான அனுபவங்கள் எமக்குண்டு. இவற்றை வைத்து நல்லாட்சி நடத்த நாம் சபதம் எடுப்போம்.

## நெருங்கிய ஒத்துழைப்பிற்கு ஏழு நாடுகள் இணக்கம்

முன்னாள் சோவியத் யூனியனின் காமன்வெல்த் சுதந்திர நாடுகளின் உறுப்புநாடுகளில் ஏழு தங்களுக்கிடையே நெருங்கிய ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான புதிய சாசனம் ஒன்றில் கையொப்பம்இட்டுள்ளன.

மைலோ ரஷ்யத் தலைநகரில் நடைபெற்ற உச்சிமாநாடு ஒன்றில் பேசிய ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்சின் இதனை அறிவித்தார்.

மேலும் சுதந்திர நாடுகள் காமன் வெல்த் அமைப்பின் பத்து உறுப்பு நாடுகளும் ஒன்றுபட்டு உழைக்கத்தயாராக இருக்கக்கோரும் பிரகடனம் ஒன்றையும் அவை வெளியிட்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடாத மூன்று முன்னாள் சோவியத் குடியரசுகளின் பெயர்களை அதிபர் பொரிஸ் யெல்சின் பகிரங்கப்படுத்தாத போதும் உக்ரேயின் மால்டோலியா, துர்க்மேனிஸ்தான் ஆகியவையே அவை எனத்தெரியவருவதாக ஏஜென்சிச் செய்திகள் கூறுகின்றன

## பிரிட்டன் ஹெலிகள் சென்றன

[டெல்அவிவ்]

தெற்கு லெபனான் எல்லைக்கு நாடுகடத்தப்பட்ட பாலஸ்தீனியர்களை ஏற்றி வருவதற்காக சைப்பிரஸிலிருந்து பிரிட்டனின் ஹெலிகப்டர்கள் பறப்பட்டுச் சென்றுள்ளன. பிரிட்டனின் இராணுவ அதிகாரி ஒருவர் வெளியிட்ட மேற்படி தகவலில் மேலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று இப் பணியை நிறைவேற்ற முன் வந்திருப்பதாகத் தெரிவித்தார்.

இதேவேளை தவறாக நாடு கடத்தப்பட்ட ஒன்பதுபேரையும், சுகவீன முற்றிருக்கும் ஆறு பேரையும் நாடு திருப்புவதற்கு இஸ்ரேல் அனுமதி அளித்திருப்பதாக பெய்ரூட்டில் பிரிட்டனின் இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## மேலும் சில உயர்தர பரீட்சை முடிவுகள்

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையின் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகியிருந்தது. குறிப்பிடத்தக்க பேலும் சில பெறுபேறுகள் வருமாறு:

மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை
கணிதம்:-
4 ஏ ஒருவர் (வா. தமிழினி)
3 ஏ, பி ஒருவர்
2 ஏ, 2 பி ஒருவர்
2 ஏ. பி. சி ஒருவர்
3 பி, சி ஒருவர்
ஏ, 3 சி ஒருவர்
பி, 3சி ஒருவர்
உயிரியல்:-
2 பி, 2 சி ஒருவர்
பி, 2சி எஸ ஒருவர்
வர்த்தகம்:-
2 ஏ பி, சி இருவர்
ஏ, 3பி இருவர்
ஏ 2 பி சி இருவர்
ஏ பி, 2சி இருவர்
4 பி ஒருவர்
ஏ, 3 சி அறுவர் (6)
கலை:-
2 ஏ, சி, எஸ் ஒருவர்
ஏ, பி, 2 சி ஒருவர்
யாழ்ற்ரன் கல்லூரி
காரைநகர்
வர்த்தகம்:-
ஏ, 2 பி, சி ஒருவர்
2 பி, 2 சி இருவர்
4 சி இருவர்
கலை:-
2 பி சி, எஸ் ஒருவர்
பி 3 சி ஒருவர்
3 சி, எஸ் ஒருவர்
யூனியன் கல்லூரி
தெல்லிப்பழை
கணிதம்:-
பி, 3 சி ஒருவர்
3 சி எஸ் இருவர்
உயிரியல்:-
பி 3சி ஒருவர்
வர்த்தகம :-
ஏ, 2 பி சி ஒருவர்
ஸ்கந்தவரோதயா கல்லூரி
சுன்னாகம்
கணிதம்:-
ஏ, 2 பி, சி ஒருவர்
உயிரியல்;-
4 சி ஒருவர்
வர்த்தகம் ;-
3 ஏ, பி ஒருவர்
கலை:-
ஏ பி, 2 சி ஒருவர்
அருணோதயா கல்லூரி,
அளவெட்டி கலை;-
3 பி ஒருவர்
வர்த்தகம்;
2 பி, 2 சி ஒருவர்
வீமன்காமம மகாவித்தியாலயம், வீமன்காமம்.
கலை:-
பி, 2 சி, எஸ் ஒருவர்
யாழ். பெரியபுலம்
மகாவித்தியாலயம்
2 ஏ, 2 சி ஒருவர்
3 பி, சி ஒருவர்
ஏ, பி, சி எஸ் ஒருவர்
பருத்தித்துறை மெதடிஸ்த
பெண்கள் கல்லூரி
கணிதம்:
3 ஏ, பி இருவர்
2 ஏ, 2 பி இருவர்

(மு) (09) (11)

## ராவ் எச்சரிக்கை

[டில்லி]

நாட்டின் பாரம்பரியத்திற்கு எதிராக தேர்தல் ஆதாயங்களைக்கருதி பாரதீய ஜனதாக் கட்சி பிரிவினைப் போக்கைக் கடைப்பிடித்து வருவதாகபிரதமர் நரசிம்மராவ் குற்றம் சாட்டியுள்ளார்.

ஹைதராபாத்நகரில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில்

பாரதீய ஜனதாக்கட்சி இத்தகைய போக்கை தொடர்ந்து கடைப்பிடிக்குமேயானால் மத்திய அரசு கடுமையாக நடக்க வேண்டியிருக்கும் எனவும் எச்சரித்தார். அத்துடன் நாட்டின் ஒட்டுமொத்தமான பொருளாதார வளர்ச்சிக்கு எந்தவொரு தடங்கலுமின்றி பொருளாதாரத் திட்டத்தை அரசு மேற்கொள்ளும் பொருட்டு அயோத்திப் பிரச்சினைக்கு ஒரேயடியாக தீர்வுகாண விரும்புகின்றது எனவும் குறிப்பிட்டார்.


## தவறிவிட்டது

சாவகச்சேரி சந்தை உட்புறமுள்ள பெட்டி கடைகளுக்கு அண்மையில் 'மாக்' ஒன்று தவறிவிட்டது. அதனுள் கடைக் கணக்கு கொப்பியும் வேறு சில பொருள்களும் இருந்தன. கண்டெடுத்தவர்கள் சிவா ஸ்ரோர்ஸ் மாக்கட் உட்புறம், சாவகச்சேரியில் ஒப்படைக்கவும். ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(3372)

யாழ்/ சிவானந்தகுருகுல பரிபாலன சபை

## விசேட பொதுக்கூட்டம்

மேற்படி பரிபாலன சபையின் விசேட பொதுக் கூட்டம் அங்கத்தவர்கட்கு அறிவித்தபடி 33/1 கடைச்சாமி ஒழுங்கையில் உள்ள குருகுல கட்டடத்தில் 24.01.93 இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும். அனைவரும் தவறாது வந்து சிறப்பிக்கவும். நன்றி

சு. இராஜேந்திரக்குருக்கள்
தலைவர்
நா சர்வேஸ்வரக்குருக்கள்
பொதுச்செயலாளர்
[4144]

றோட்டரியன் சத்தியமூர்த்தி
ஞாபகார்த்தமான
வெள்ளிக்கிண்ண உதைபந்தாட்ட

## சுற்றுப் போட்டி

யாழ். மிட்ரவுண் றோட்டறக்ற் கழகம் நடாத்தும்
மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி

இடம் : யாழ். சம்பத்தரிசியார் கல்லூரி(பற்றிக்ஸ்)
காலம்; 24-1-93 ஞாயிறு பி. ப. 2-30 மணி

1 ஆம் இடத்திற்கான ஆட்டம்
பாடும்மீன் எதிர் சென்றோக்ஸ்
3 ஆம் இடத்திற்கான ஆட்டம்
சென். அன்ரனீஸ் எதிர் சென்மேரிஸ்

(4146)

சகல பனை, தென்னை
தொழில் வல்லுனர்களுக்குமான

## முக்கிய அறிவித்தல்

பனை, தென்னை ஆகியவற்றிலிருந்து கள், பதநீர் சீவுபவர்கள் யாவரும் அந்தந்தப்பகுதித் தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களாக இருக்க வேண்டியது அவசியமானதாகும் ஆகவே நீங்கள், உங்கள் பகுதிகளிலுள்ள மேற்படி சங்கங்களோடு உடன் தொடர்பு கொண்டு உரிய முறையில் சங்கங்களின் அனுமதியைப் பெற்றுத் தொழில் புரியும் மரங்களுக்குச் சங்கங்களால் இலக்கமிட்டுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள். அனுமதியற்ற இலக்கமிடப்படாத மரங்களிலிருந்து கள், பதநீர் பெறுவது கண்டுபிடிக்கப்பட்டால் அந்தந்தச் சங்கங்களால் மரங்களின் பாளைகள் வெட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படும். இதைக் கவனத்திற் கொண்டு தங்களுக்கு ஏற்படக்கூடிய தொழில் நட்டங்களைத் தவிர்த்துக் கொள்ளும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

வடமராட்சி கொத்தணி

1. கட்டைவேலி, உடுப்பிட்டி தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்
2. பருத்தித்துறை ,, ,, ,, ,,
3. அச்சுவேலி ,, ,, ,, ,,

- வடமாகாண தெ. ப. பொ. உ.
வி. கூ. ச. சமாசம்

(சி-5835)

சிந்தனைக்கு

அறிவுரையால் ஒருவன் பெறும் நன்மையைவிட, அவனுக்கு அச்சம் ஊட்டிச் சலசலக்கச் செய்யும் ஒரு நிகழ்ச்சியால் அவன் அதிகம் நன்மை அடைவான்.

— எட்சன் வாட்ஸன் ஹோவ்.


ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 24-01-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண் - 05


# கிட்டுவை சாகடித்தவர்கள் சமாதானத்தின் விரோதிகள்

தளபதி கிட்டு சமாதான யோசனைகளுடனேயே இலங்கை நோக்கி வந்தார் என்பது தற்பொழுது தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது. இதனை ஏற்கனவே விடுதலைப் புலிகள் கூறியிருப்பினும், அதனை நம்பாத சில சந்தேகப் பிராணிகளுக்கு 'குவேக்கஸ்' சமாதானக் குழுவினர் விடுத்துள்ள அறிக்கை சந்தேகத்தைப் போக்கியிருக்க வேண்டும்.

ஏனெனில் 'குவேக்கஸ் சமாதான சேவை' என்னும் இவ் அமைப்பு, ஒரு மனித உரிமைகள் அமைப்பாகும். இவ் அமைப்பிற்கு விடுதலைப் புலிகள் மீது அன்போ, அன்றி இந்திய, சிறிலங்கா அரசாங்கங்கள் மீது காழ்ப்போ இருப்பதற்கு நியாயமில்லை. சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு தம்மால் இயன்ற பங்களிப்பைச் செய்வதே இவ் அமைப்பின் நோக்கமாகும். இவ் அமைப்பு, தற்பொழுது தளபதி கிட்டு சமாதானத் தீர்வுத்திட்டத்துடனேயே இலங்கை நோக்கிப் பயணமானதாக தாம் நம்புவதாக உறுதிபடத்தெரிவித்துள்ளது. இவ் அறிவிப்பானது, புலிகளின் சமாதான தீர்வு நோக்கிய இன்றைய நிலைப்பாட்டை உலகம் புரிந்து கொள்ளவும் போதுமானதாகும்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் அறிவித்தது போன்று தளபதி கிட்டுவின் வருகை இந்தியாவிற்கு நன்கு தெரியும். அவர் எங்கிருந்து புறப்படுகின்றார் எதற்காகப் புறப்படுகின்றார் என்பதும் இந்தியாவிற்கு நன்கு தெரியும். இருப்பினும், இந்தியா தளபதி கிட்டுவை சாகடித்தது.

அதாவது, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சி ஒன்றை இந்தியா முறியடித்தது. கிட்டு சமாதானத்தை நிலைநாட்டுவதில் எவ்வளவு அக்கறையாக இருந்தார் என்பதை 'குவேக்கஸ்' சமாதானக்குழுவின் அறிக்கையே தெளிவாகக் காட்டுகின்றது. "ஒரு தீவிர போராளி என்ற போதிலும், இனப்பிரச்சினைக்கு மனிதாபிமான முறையில் நேர்மையான அரசியல்தீர்வுகாண உழைத்த போராளிகளின் தலைவர் கிட்டு" என குவேக்கஸ் அறிக்கை தளபதி கிட்டு பற்றிக் கூறுகின்றது. இந்நிலையில் கிட்டுவின் மரணம், இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வு விடயத்தில்பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், தளபதி கிட்டுவின் மரணம் குறித்து சிறிலங்காவிலுள்ள ஒரு பகுதியினர் மகிழ்ச்சி அடைவதுபோல் தெரிகின்றது. சிலர் இது குறித்து பேசியுள்ளதோடு, இந்தியாவிற்கு நன்றி தெரிவிக்கவேண்டும் எனவும் கூறியுள்ளனர். இவர்கள் தளபதி கிட்டுவின் மரணம், விடுதலைப் புலிகளுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக எண்ணுவதுபோல் உள்ளது. உண்மையில், கிட்டுவின் மரணம் புலிகளைப் பொறுத்து இழப்புத்தான். மறுப்பதற்கில்லை. ஆனால், சிறிலங்காவில் எவரும் சந்தோசப்படுவதற்கான இழப்பல்ல. அது. இலங்கையில் சமாதானம் தொலைக்கப்பட்டது என்பதே சரி. சமாதானம் ஏற்படுத்த எடுக்கப்பட்ட பாரிய முயற்சி தோற்கடிக்கப்பட்டது என்பதே உண்மை.

அதாவது, இலங்கையில் சமாதானம் தோன்றவிடாமல் இந்தியா போட்ட முட்டுக்கட்டையே தளபதி கிட்டுவின் சாகடிப்பு. இதனால், கிட்டுவின் மரணத்தில் சந்தோசமடைபவர்கள் இலங்கையில் சமாதானம் தோன்றுவதை விரும்பாதவர்கள் என்பதே உண்மை. அதாவது, அவர்கள் சமாதானத்தின் விரோதிகள்.

# வீடுகள் தகர்க்கும் சத்தம் இரவு பகலாக கேட்கிறது

## ராணுவத்தின் பிடியிலிருந்து விருவிக்கப்பட்ட மாணவன் தகவல்

(வடமராட்சி)

இளவாலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் தொடர்ந்தும் வீடுகள் உடைக்கப்பட்டு வருகின்றன. வீடுகளை படையினர் குண்டு வைத்து தகர்த்தும், இடித்தும் வருகின்றனர். இரவு பகலாக வீடுகள் தகர்த்தெறியும் சத்தம் கேட்கிறது.

இவ்வாறு இளவாலை ஹெறான் வெளிட்டில் கடந்த ஐந்து மாதங்களாக சிறிலங்கா இராணுவத்தினரின் பிடியில் சிக்கியிருந்து விடுவிக்கப்பட்ட பாலகிருஷ்ணன் - விநாயகமூர்த்தி (வயது 17 அளவெட்டி) இதனை தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்; அப்பகுதிக்கு மீண்டும் செல்லக்கூடிய நிலை ஒன்று உருவானால் அங்கே கல் வீடுகளைக் காண முடியாது. அப்பகுதி வெளிப்பிரதேசமாகவே இருக்கும்.

கடந்த ஐந்து மாதங்கள் நல்ல உணவு, மருந்துவகைகள், கல்வியின்றி பெரும் கஷ்டத்தின் மத்தியிலேயே வாழ்ந்தோம். இன்னும் அப்பகுதில் சுமார் நூற்றியம்பது பேரளவில் உள்ளனர் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வர விரும்பிய போதிலும் வருவதற்கு வழி தெரியாத நிலையில் தவிக்கின்றனர்.

உரிய மருந்து வகைகள் இல்லாததினால் பலர் இறக்க நேரிட்டது. அவர்கள் வயோதிபர்கள் அவர்களது சடலங்களை அருகில் நாங்களே புதைக்க நேரிட்டது. எம்முடன் வந்த இருவரில் ஒருவர் நடக்க முடியாத நோயாளி; மற்றவர் மன நோயாளி. இவர்கள் கடந்த ஐந்து மாதங்களாக நோயினால் வேதனைப்பட்டனர். தாங்கமுடியாத நிலையிலேயே பரிதாபகரமாக வாழ முடிந்தது.

இரவு பகலாக பீதி நிலையிலேயே வாழ்ந்து வந்தோம், ஆட்களின் தொகை குறையக் குறைய இருப்பவர்களுக்கு மேலும் பீதி நிலை ஏற்படுகிறது.

தபால்கள் வந்தாலும் சிறிலங்கா இராணுவத்தினரால் உடைத்துப் பார்த்த பின்னரே தருவார்கள். உறவினருக்கு அனுப்பும் தபால்கள் படையினருக்குத் தெரியாமலே அனுப்பப்படுகின்றன. மக்கள் குடியிருப்புப் பகுதிகள் அடிக்கடி எடும் புகைமண்டலமாகவே காணப்படும்.

படையினரின் பிடியில் சிக்கியிருந்ததினால் எனது கல்வியும் பாழடைந்து போனது. நான் எனது கல்வியைப் பற்றி எடுத்துக் கூறினாலும் படையினர் கற்காதவர்கள் என்று உணர்த்தி விடுவார்கள் என்றார்.

(யோ)

### காஷ்மீர் மக்களின்

# சுயநிர்ணய உரிமையை அமெரிக்கா ஆதரிக்கும்

### - பில் கிளிங்டன்

(வாஷிங்டன்)

காஷ்மீர் மக்களின் விருப்பத்தில் நாம் அக்கறை கொண்டுள்ளோம் என்றும், காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிப்பதாகவும், அமெரிக்க அதிபர் பில் கிளிங்டன் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் பிலடெல்லியா மாநில பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும், இந்தப் பிரச்சனை காஷ்மீர் மக்களின் ஜனரஞ்சகமான விருப்பத்திற்கு ஏற்ற வகையில் தீர்க்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் இருக்கும் காஷ்மீர் மாநிலப் பகுதியில் நடைபெறும் சம்பவங்களால் இந்திய—பாகிஸ்தானிய அரசுகளுக்கு இடையே முறுகல் நிலை ஏற்பட்டு வருவதும், இந்தியா காஷ்மீரைத்தொடர்ந்து தன் பிடியில் வைத்திருக்க முயன்று வருவதும் தெரிந்ததே.

இராணுவ

விடுவிக்கப்பட்டவர்களில் மூன்று பெண்களும், இரண்டு நோயாளிகளும், ஒரு ஆலய பூசகரும் அடங்குகின்றனர். இவர்களுடன் தடுத்து வைக்கப்பட்டிருந்த அருட்திரு சகோதரி வஸ்தியாம்பிள்ளை-சகாநாயகியும் வந்தார். இவர் இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட ஆசிரியை ஆவார்.

விடுவிக்கப்பட்டோர் விபரம் வருமாறு;- சோமசுந்தரம்-சிவலிங்கம் (வயது 25) இளவாலை, பாலகிருஷ்ணன்-விநாயகமூர்த்தி (வயது 17) அளவெட்டி, கந்தையா-செல்லத்துரை (வயது 55) அளவெட்டி, மாணிக்கம்-துவராசா (வயது 35) சண்டிலிப்பாய், வைரமுத்து - சிவலிங்கம் (வயது 65) மல்லாகம், செல்லப்பா- தம்பித்துரை (வயது 48) மல்லாகம், கந்தையா-செல்லத்துரை (வயது 68) அளவெட்டி, ஸ்ரீனிவாசன் - குணநாதசிவம் (வயது 42) அளவெட்டி, முருகையா-ரகுதாஸ் (வயது 24) அளவெட்டி, சின்னட்டியான்- தர்மலிங்கம் (வயது 40) தெல்லிப்பழை, சின்னவன் - பொன்னு (வயது 72) தெல்லிப்பழை, வன்னியன் - சின்னவன் (வயது 65) தெல்லிப்பழை, உருத்திரமூர்த்தி நாகேஸ்வரி(வயது48) அளவெட்டி, சின்னத்தம்பி குமாரசுவாமி (வயது 80) அளவெட்டி [நோயாளி], உருத்திரமூர்த்தி- பரந்தாமன் (வயது 30) அளவெட்டி, (நோயாளி) வெற்றிவேலு-சுந்தரமூர்த்தி (வயது 72) சுன்னாகம், செல்லையா-நல்லமுத்து (வயது55) அளவெட்டி, செல்லப்பா -பத்மநாதன் (வயது 59) அளவெட்டி, அம்பலவாணர்- தம்பிப்பிள்ளை (வயது 85) அளவெட்டி, சுப்பிரமணியம்-சிற்றம்பலம் (வயது 58) மாதகல் ஆகியோர் தமது உடைமைகளுடன் வந்து சேர்ந்து யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டனர். [யோ]

யோதிய

றனர். இங்கு 42 மாணவர்கள் இருக்கின்றனர் இவர்களுக்கு சத்துணவுகள் கிடைப்பதில்லை. மீன் கிடைப்பதில்லை மரக்கறிவகைகளில் வாழைப்பொத்தி தவிர வேறெதுவும் கிடைப்பதில்லை இப்பகுதியில் சுமார் 350 வயோதிபர்கள், வயோதிபர் விடுதிகளில் இருக்கின்றார்கள் இவர்களுக்கு போதிய உணவு, வைத்திய வசதிகள் கிடைப்பதில்லை ஆரம்ப காலத்தில் இராணுவ வைத்தியர் அங்கு சென்று பார்வையிட்டனர். ஆனால் தற்பொழுது எவரும் அங்கு செல்வதில்லை. யாழ்ப்பாணத்தில் இருந்து இருவாரங்களுக்கு ஒரு முறையாவது ஒரு வைத்தியரை அனுப்பும்படி கேணல் கெமுனு குலதுங்க எம்மிடம் கேட்டார். எவ்வித அடிப்படைவசதியுமற்ற நிலையில் இம்மக்கள் வாழுகின்றனர் இவற்றைக் கண்ட ஆயர் மிகவும் மனம் வருந்தினார்.

"புதிதாக பதவியேற்று அப்பகுதிக்குச் சென்ற தமக்கு குதூகலத்துடன் வரவேற்பளிக்க வேண்டிய நேரத்தில் இவ்வளவு துன்பத்தில் உழலும் மக்களை காண வேண்டி ஏற்பட்டமை மன நெகிழ்ச்சியை தந்ததாகஆயர் மேலும் தெரிவித்தார். தான் அவர்களை துன்பத்திலிருந்து மீட்பேன் என்றும் அவர் கூறினார்

"சுமார் 12 தேவாலயங்களைச் சென்று பார்த்தோம் அவற்றில்பலசிதைந்தநிலையில் காணப்படுகின்றன. மாதகல் புனித தோமையார் ஆலயம் உடைந்த நிலையில் காணப்படுகிறது.

'இங்குள்ள மக்களுக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப் பட்டது. இதனை தற்போது அங்குள்ள அருட்திரு. ஜே. யேசுதாஸ் அருட்திரு. ஞா. பீட்டர் ஆகியோர் மேற்கொண்டுவருகின்றனர்.

## ஆடல்வல்லான் நிகழ்ச்சி இன்று

யாழ். பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் கவின்கலை மன்றத்தால் கடந்த ஞாயிறன்று நடாத்தப்படவிருந்த 'ஆடல்வல்லான்' பரத நாட்டிய நிகழ்ச்சி இன்று காலை ஒன்பது மணிக்கும், பதினொரு மணிக்கும் நடைபெறவுள்ளது. ஒன்பது மணிக்கு நடைபெறும் நிகழ்ச்சிக்கு காலை நிகழ்ச்சிக்குரிய நுழைவுச் சீட்டுக்களும் பதினொரு மணிக்கு நடைபெறும் நிகழ்ச்சிக்கு மாலை நிகழ்ச்சிக்குரிய நுழைவுச் சீட்டுக்களும் செல்லுபடியாகும்

## விண்ணப்பிக்கலாம்

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் தற்காலிக உதவியாளர் ஒருவரை தெரிவு செய்வதற்கு சங்க அங்கத்தவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 31ஆம் திகதி ஆகும். மேலதிக விபரங்களை சமாசக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

காங்கேசன்

கம், புலிகள் - அரசு - செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றுக்கிடையில் ஒரு முத்தரப்பு உடன்பாட்டை செய்துகொள்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

'அங்கு சிக்கியுள்ள மக்கள் வெளியேறிவருவதையே விரும்புவதாகவும் அவர்கள் அதற்கென இராணுவத்திடம் விண்ணப்பித்திருப்பதாகவும் எம்மிடம் தெரிவித்தனர்' என்றார்.

ஆயர் வெகுவிரைவில் தீவுப் பகுதிக்கும் செல்ல இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### இந்திய சதிச் செயலைக் கண்டித்து

# படைப்பாளிகளின் கண்டனப் பேரணி

இந்திய வல்லாதிக்க அரசு தமிழீழத்தின் மீது செய்து வரும் அழுத்தங்களைக் கண்டிக்கும் முகமாக இந்திய அரசினால் வங்கக் கடலில் வைத்து மரணப் பொறிக்குள் சிக்கவைக்கப்பட்ட கேணல் கிட்டு உட்பட 10 போராளிகளுக்கும் அஞ்சலி செய்யும் முகமாகவும் தமிழீழ கலை இலக்கிய பத்திரிகையாளர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து எதிர்வரும் 27 01 93 புதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யா/பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் கண்டன கூட்டத்தையும், அதற்கு முன்பாக நாச்சிமார் கோவிலடியில் இருந்து கண்டன ஊர்வலத்தையும் நடாத்த ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சகல கலை இலக்கிய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு நினைவுரை ஆற்றும் இந்நிகழ்வில் மறைந்த போராளிகள் நினைவாக நாத அஞ்சலி நிகழ்வுகளும் கவிதாஞ்சலி நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

## செம்பியன்பற்றில் இன்று கலை நிகழ்ச்சிகள்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் யாழ். மாவட்டத்தினரால் கோட்டங்கள் தோறும் நடாத்தப்பட்டு வரும் கலை நிகழ்ச்சிகள் இன்று செம்பியன்பற்று புனித செபஸ்தியார் கோவிலடியில் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து செவ்வாய்க்கிழமை 26-ம் திகதி சுட்டிபுரத்திலும், புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரியிலும், புதன்கிழமை 27-ம் திகதி சென்பற்றிக்ஸ் கல்லூரியிலும், வியாழக்கிழமை 28-ம் திகதி உரும்பராய் சைவத்தமிழ் வித்தியா சாலையிலும், சனிக்கிழமை 30-ம் திகதி நாகர் கோவிலடியிலும் நடைபெறவுள்ளது. முன்பு ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சிகள் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஒத்திவைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## உள்வீட்டு மோதலே இடமாற்றத்திற்கு காரணம்

கூட்டுப்படைத் தலைமையகம் அநுராதபுரத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டமையானது விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை தீவிரப்படுத்துவதற்காக என்றே பொதுவாகக் கூறப்பட்டாலும், இராணுவ உயர் மட்டத்தில் நிலவும் உள்வீட்டு மோதல்களே இம் மாற்றத்திற்கு காரணம் என்று நம்பகரமாக தெரியவருகின்றது.

இதனால் இராணுவ மாற்றங்கள் எப்படி இருந்த போதிலும் வடபகுதியில் இப்போதைக்கு பாரிய இராணுவ தாக்குதல்கள் இடம்பெறுவது சாத்தியம் இல்லை என்று ஓய்வுபெற்ற படைத்தளபதி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

## அழுகிய நிலையில் சடலம் மீட்பு வைத்தியசாலையில் இருந்தவராம்

(நெல்லியடி)

பருத்தித்துறை தம்பசிட்டி பகுதியில் இருக்கும் சாளம்பை என்னுமிடத்தில் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில தொங்கிய சடலமொன்று அழுகிய நிலையில் கண்டுபிடிக்கபபட்டுள்ளது.

மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கே. குலேந்திரன் (41) என்பவரது சடலமே இதுவென பின்னர் அடையாளம் காணப்பட்டது.

# அன்புடன் நன்றி

# கேணல் கிட்டு

## (திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார்)

அவர்களின் வீரச்சாவை அறிந்து எமக்கு ஆறுதலளித்த போராளிகள், குருக்கள், கன்னியர்கள், பெரியோர்கள், நண்பர்கள், மாணவர்கள், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் அன்புகலந்த நன்றி. தனித்தனியே நன்றி தெரிவிக்க இயலாமைக்கு வருந்துகின்றோம்.

அன்புடன்

மனைவி: ஆன் சிந்தியா கிருஷ்ணகுமார்,
தாய்: திருமதி இராசலச்சுமி சதாசிவம்,
சகோதரன்: திரு. சதாசிவம் காந்திதாசன்,
மற்றும் உறவினர்.

(4143)

## அறிவியலரங்கும் உருவப்படத் திறப்பும்

நாவன்மார்கட்டு சனசமூக நிலையத்தினரால் மாதாமாதம் நடாத்தப்படும் அறிவியல் அரங்கு நாளை 25.01.93 [திங்கள்] அன்று நடைபெறவுள்ளது. ''தமிழீழத்தில் சிங்களக் குடியேற்றங்கள்'' என்னும் தலைப்பில் திருமலை யோகேந்திரம் அவர்கள் உரையாற்றவுள்ளார். இவ்விழாவில் க. பொ. த உயர்தரப் பரீட்சையில் ''4 A'' பெறுபேற்றினைப் பெற்றுள்ள மேற்படி நிலையத் தலைவர் க. கேந்திரன் அவர்களும் இப்பகுதியில் பல்கலைக்கழகப் பிரவேசத் தகுதிக்கான பெறுபேற்றினைப் பெற்றுள்ள மாணவர்களும், 5ஆம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ள மாணவியொருவரும் கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன் இந் நிலையத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான ப. சண்முகதாஸ் நிலையத்தின் பொருளாளராக விளங்கிய வீரவேங்கை சின்னநசீர் (கார்த்திகேயன் சிவபரன்) ஆகியோரின் உருவப்படங்களும் திறந்து வைக்கப்படவுள்ளன.

### மினிபஸ் - சைக்கிள் மோதல்

மினிபஸ் ஒன்று சைக்கிளுடன் மோதியதில் சைக்கிள் முற்றாகச் சேதமடைந்தது. நேற்று காலை யாழ் மின்சார நிலையவீதி, கஸ்தூரியார் வீதிச் சந்தியில் இவ்விபத்து இடம்பெற்றது இதில் சைக்கிள் முற்றாகச் சேதமடைந்திருந்தும் பிரயாணி எவ்வித காயமுமின்றித் தப்பிவிட்டார்.

### ஆங்கில

விடுதலைப் புலிகள் சமாதானத்திற்கு வழிகோலும் நல்லெண்ண முயற்சியாகவே இரு சிங்கள பொலிசாரை விடுதலை செய்தனர் இந்த சந்தர்ப்பத்தை சிறிலங்கா அரசாங்கமும், ஏனைய கட்சிகளும் கைநழுவ விடக்கூடாது என்றும், இந்த சமாதான முயற்சியை மேலும் முன்னெடுக்க வேண்டியது சிங்கள கட்சிகளின் கடமை என்றும், இதற்கு இவர்கள் காட்டும் ஆர்வத்தை கொண்டே விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து பேசுவது தொடர்பாக ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

### ஓய்வூதிய

மேலும் இந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் இதனைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் ஓய்வூதியத் திணைக்கள ஆணையாளர் ஆர். டபிள்யூ. பியசேனா கடந்த வியாழனன்று தெரிவித்துள்ளார்.

### பாதை

வாகன அணி மூலமாக இம் மண்ணெண்ணெய் எடுத்து வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக கொழும்பில் இருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறைமுகத்திற்கு மண்ணெண்ணெய் எடுத்துவரப்படவுள்ளது இவ்வாறு எடுத்து வரப்படும் மண்ணெண்ணெய் காங்கேசன்துறை துறைமுகத்தில் உள்ள மண்ணெண்ணெய்க் குதத்தில் களஞ்சியப்படுத்தப்படவுள்ளது.

மிக விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் வாகன அணிப் போக்குவரத்தின்போது முதற்கட்டமாக மண்ணெண்ணெய்ப் பீப்பாக்கள் குடாநாட்டுக்குள் எடுத்துவரப்படவுள்ளதாக தெரியவருகிறது. (க)

## குற்றச்சாட்டு எதுவுமின்றி உதவி நிதியாளர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக உதவி நிதியாளர் குற்றச்சாட்டுகள் எதுவும் அற்ற நிலையில் விடுவிக்கப்பட்டார்.

யாழ். பல்கலைக்கழக தேவைக்கென கொள்வனவு செய்யப்பட்டு கொழும்பில் வைக்கப்பட்டிருந்த இரசாயனப் பொருள்கள் தொடர்பாகவே இவர் கைது செய்யப்பட்டார். அங்கு வைக்கப்பட்டிருந்த இரசாயனப் பொருள்கள் அனைத்தும் கற்பித்தல் நடவடிக்கைக்கு தவிர ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட முடியாது என விசாரணையின்போது எடுத்துக் கூறப்பட்டது இதனையடுத்து யாழ். பல்கலைக்கழக கொழும்பு களஞ்சியத்திற்கு வைக்கப்பட்டிருந்த சீல் அகற்றப்பட்டது.

மேலும் யாழ். கொண்டு செல்ல அனுமதி வழங்கப்படாத இப்பொருள்கள் ஏன் கொள்வனவு செய்யப்பட்டன எனவும் கேட்கப்பட்டதாம். அரசாங்கத்தின் தடைக்கு முன்னரே கொள்வனவு கட்டளைகள் வழங்கப்பட்டு விட்டதாக எடுத்துக் கூறப்பட்டதைத் தொடர்ந்து குற்றச்சாட்டுகள் எதுவும் அற்ற நிலையில் இவர் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

## விசர் நாய்த் தொல்லை நவாலி வடக்கில் அதிகரிப்பு

நவாலி வடக்குப் பகுதியில் பெருமளவில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது.

இக் கட்டாக்காலி நாய்களினால் நாளாந்தம் விசர்நாய் கடிக்கு மக்கள் உள்ளாகுவதுடன் மருந்துகள் இன்மையால் அவை வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளாகியுள்ளது.

கட்டாக்காலி நாய்களின் தொல்லை பற்றி மானிப்பாயில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி இது விடயத்தில் அக்கறை செலுத்தினால் பெருமளவு நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்படலாம் என நவாலி மக்கள் கூறுகின்றனர்.

இதேவேளை கடந்த வாரத்தில் மட்டும் நவாலியில் ஒரு விசர்நாய் ஆறு பேருக்கு கடித்தது தெரிந்ததே. (05)

## லொறிச் சாரதிகள் அறுவர் வவுனி. ராணுவத்தால் கைது

(வவுனியா)

தென்பகுதியிலிருந்து வடபகுதி நோக்கி பொருள்களை ஏற்றி வந்த பொதுஸ்தாபனம் ஒன்றின் லொறிச் சாரதிகள் ஆறு பேர் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் 'செயரி' நிறுவனத்திற்குரிய லொறிகளை ஓட்டி வந்த சாரதிகளே கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈரற்பெரியகுளம் வாகன சோதனை முகாமில் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட இந்த லொறிகளில் பெருமளவு 'எஞ்சின் ஒயில்' கண்டு பிடிக்கப்பட்டதாம். இதனை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது வவுனியா இராணுவ முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் இராணுவத்தால் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## இப்படியும் ஒருவகை திருட்டு

[குருநகர்]

ஒரு வீட்டில் இருந்த (ஜக்) உயர்த்து கருவியைத் திருடி வந்து இன்னொரு வீட்டில் நிறுத்தியிருந்த உழவுயந்திரப் பெட்டி சில்லுகளைக் களவாட நடைபெற்ற முயற்சி அயலவர் வருகையால் முறியடிக்கப்பட்டது.

இச் சம்பவம் கடந்த புதன் ஹர்த்தால் தின இரவு 12.00 மணியளவில் வண்ணார் பண்ணை மேற்கு நாவலடி ஒழுங்கை முத்தையா என்பவரது வீட்டில் நடைபெற்றது.

கோவில் பிள்ளையார் கோவில் வீதியிலுள்ள நடேசு என்பவரது இல்லத்தில் திருடிய உயர்த்தும் கருவியே உழவுயந்திர டயர்களை கழற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டதாகப் பின்னர் தெரிய வந்தது.

அயலவர் ஒருவர் வந்து குறிப்பிட்ட வீட்டுக் கதவைத் தட்டியதை அவதானித்த திருடன் மதில்தாவி ஓடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது [21

### விரைவில் விசாரணையாம்

[கொழும்பு]

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணை விரைவில் நடைபெறவிருப்பதாகவும், இதற்காக இருபத்து மூன்று சந்தேகநபர்களும் இடம் மாற்றப்பட்டிருப்பதாகவும், கூறப்படுகிறது

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

22 - 01 - 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8103

23- 01- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8121

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

42-2323, 27-2034, 26-4281, 24-6431, 24-6168, 41-6686, 24-5140, 26-8223, 26-6984, 28-7261, 24-1172, 28-6996, 28-6020, 24-576, 24-5121, 24-4992.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-4457, 40-6759, 27-4628, 41-9530, 24-8212, 26-7252, 41-9038, 41-1996, 27 5406, 42-3329, 27-6769, 27-2056, 24-4282, 27-9365, 28-5294, 42-0733, 42-9325, 40-4429, 26-5962, 24-9825, 41-1092.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.